மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளைச் செய்து, தொழில் முனையக்கூடிய வாய்ப்புகளைத் தேடி வரக்கூடியவர்களுக்கு, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய இத்தகைய தொழிற்பூங்காக்களை நாங்கள் காட்டுகிறோம். இத்தகைய தொழில் வளர்ச்சி சமச்சீரான வகையில் தமிழ்நாடு முழுவதும் அமைய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அறிவுரைகள் வழங்கியிருக்கிறார்கள். குறிப்பிட்ட பகுதியில் மாத்திரமில்லாமல் அது எல்லா இடங்களிலும் இருக்க வேண்டுமென்பதை அவர்கள் குறிப்பாக வலியுறுத்தியிருக்கின்றார்கள். ஆகவே, தொழில்முனைவோர்கள், தொழில் முதலீடு செய்யக்கூடியவர்களுக்கு எல்லா இடங்களையும் காட்டுகிறோம். அவர்கள் விரும்புகிற இடங்களை அவர்கள் தேர்வு செய்கிறார்கள்.*

தொழிலைப் பொறுத்தவரையில், திருச்சிராப்பள்ளி மிக வளர்ந்து வரக்கூடிய ஒரு தொழில் நகரமாக இருக்கிறது. அதனை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இப்போது பாதுகாப்புத் துறை சம்பந்தமான தொழில்கள் அங்கே அதிகளவில் வர இருக்கக்கூடிய நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்திருக்கக்கூடிய இந்த சிப்காட் தொழில் வளாகத்திலும் அதிகளவில் தொழில்கள் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நாங்கள் கனிவோடு கவனத்தில் கொண்டு, அத்தகைய தொழில் முதலீடுகள் வருகிறபோது புதுக்கோட்டை மாவட்டத்தில், நிச்சயமாக அவர்களுக்கு ஒரு வாய்ப்பினை உருவாக்கக்கூடிய வகையில் நாங்கள் வழிகாட்டுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

234—

தார்ச் சாலை

***3415—திரு. தி. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 மே 6]

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டம், மேல்மங்கலம் ஊராட்சி, தெற்கு குடியிருப்பில் தார்ச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையினை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மேல்மங்கலம் ஊராட்சியில் மூன்று சாலைகள் பயன்பாட்டில் உள்ளன. அவையாவன, மேல்மங்கலம் அறந்தாங்கி கட்டுமாவடி சாலை முதல் மேல்மங்கலம் தெற்கு சாலை வரை 1,050 மீட்டர் நீளமுள்ள சாலையாகவும், அதேபோன்று குன்னூர் தொண்டைமானேந்தல் சாலை முதல் மேல்மங்கலம் தெற்கு குடியிருப்பு வரை தார்ச்சாலையாக 2.7 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையாகவும் இருக்கின்றது. அதேபோல், மேல்மங்கலம் தெற்கு ஆத்தங்கரை சாலை வரையில் 1,000 மீட்டர் மண் சாலையாக உள்ளது. ஆக, அந்த வகையில் மேல்மங்கலம் ஊராட்சியில் குன்னூர் தொண்டைமானேந்தல் சாலை முதல் மேல்மங்கலம் தெற்கு குடியிருப்பு வரையில் உள்ள தார்ச்சாலையில், 2.7 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால், இந்த மூன்று சாலைகளுக்கும் முன்னுரிமை தந்து, 2022–2023 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.105 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் மேம்படுத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன் அவர்கள்.*

முற்பகல் 10–30

திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சாலையைச் சீர்செய்தால் இப்பகுதியில் மேலமங்கலம் கிழக்கு, தெற்கு, காரணியேந்தல், வேம்பூர், குன்னூர், பள்ளத்திவயல், கிடங்கிவயல் போன்ற பல குக்கிராமங்கள் பயன்பெறும். இதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு*

எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியில் மூன்று ஊராட்சி ஒன்றியங்களும், 88 ஊராட்சிகளும் உள்ளன. இவற்றில் நிறைய சாலைகள் பழுதடைந்துள்ளன. ஆகவே, ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் குறைந்தபட்சம் 15 சாலைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை இந்த நிதியாண்டிலேயே முன்னுரிமை அளித்து, சீர்செய்துதர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது மட்டுமல்ல; கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அவர் ஆற்றிய உரையைக் கவனித்தேன். தனது தொகுதியின் வளர்ச்சியில், தனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த தொகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வத்தோடு இருக்கிறார்கள். அதேநேரத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையிலான இந்த அரசும் மக்களுக்கு எல்லா வசதிகளையும், குறிப்பாக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை கிராமப் பகுதிகளில் உருவாக்கித்தர வேண்டும் என்று முனைப்போடு செயல்பட்டு வருகின்றது. ஆக, உங்களுடைய எண்ணங்களும், இந்த அரசின் எண்ணங்களும் ஒன்றாக இருக்கின்றன. நிதிநிலைகளுக்கேற்ப நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வதைப்போல, நிறைவேற்றப்பட்டவைதவிர, இன்னும் நிறைவேற்றப்படாத பல காரியங்களையும் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிப்போம். அந்த உறுதிமொழியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன் அவர்கள்.

திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம், சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இது மிகவும் பழுதடைந்துள்ளது. இதற்கும் ஒரு புதிய கட்டடம்

2022 மே 6]

கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதியாண்டில் குறைந்தபட்சம் ஓர் ஒன்றியத்திற்கு 4 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுடைய தேவைகளுக்காக சாலைகள், சுகாதாரம், தெருவிளக்கு என்று இப்படி பல்வேறு அடிப்படை வசதிகளைச் செய்து தருவதோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தங்களுடைய பணிகளை முறையாகச் செய்வதற்கும், பொதுமக்கள் அவர்களை வந்து சந்திப்பதற்கும் வசதிகளை உருவாக்கித்தர வேண்டும் என்ற நோக்கத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில்தான் சமீபத்தில் ஏறத்தாழ 56 ஊராட்சி ஒன்றியங்களுக்கான கட்டடங்களுக்கு, ஒவ்வொரு கட்டடமும் ரூ.3.95 கோடி மதிப்பீட்டில் ஏறத்தாழ ரூ.221 கோடிக்கு அலுவலகக் கட்டடங்களைக் கட்டுவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதேநேரத்தில் அங்கு செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய அலுவலகங்கள் எந்த நிலையில் இருக்கின்றன, பழுதடைந்த நிலையில் இருக்கின்றனவா, அதற்கான இடவசதிகள் எல்லாம் இருக்கின்றனவா என்பதையெல்லாம் துறைவாரியாக ஆய்வு செய்து, கேட்டறிந்துதான் செய்யப்படுகிறது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களும் இங்கு இருக்கின்றார்கள். தங்களது மாவட்டத்திற்கு நிறைய கட்டடங்கள் வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லி கேட்டுள்ளார்கள். நிச்சயமாக தகுதியின் அடிப்படையில், ஒன்றிய அலுவலகத்திற்கான கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை ஒன்றிய அளவில், ஊராட்சிகளில், கிராம நிருவாக அலுவலர் அலுவலகம், அதைப்போல ஊராட்சி மன்றத் தலைவர்கள் போன்றவர்களுக்கு தனித்தனியாக அலுவலகங்கள் உள்ளன. ஆகவே, பொதுமக்கள் தங்களது தேவைகளைப் பெறுவதற்கு இடம் விட்டு இடம் செல்ல வேண்டிய சூழ்நிலையை உணர்ந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவற்றை ஒருங்கிணைத்து ஊராட்சி மன்றத் தலைவர் அலுவலகம், கிராம

நிருவாக அலுவலர் அலுவலகம் இவற்றையெல்லாம் இணைத்து அவர்களுக்குத் தனித்தனி அறைகளை ஒதுக்கி, கூட்டரங்கை அமைத்து, இதுவரை இல்லாத அளவில் தலா ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் 600 புதிய ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுவதற்கு, விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இடவசதி இருக்குமேயானால், நீங்கள் குறிப்பிட்ட நான்கு இடங்களில் மட்டுமல்ல, அதற்கு மேலும் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

235—

அங்கன்வாடி மையம்

***1625—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதி, கடுவெளியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருவையாறு வட்டாரம், கடுவெளியில் உள்ள குழந்தைகள் மையமானது 1998 ஆம் ஆண்டு முதல் அரசு சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையக் கட்டடம் பழுதடைந்த காரணத்தினால், குழந்தைகள் பாதுகாப்பு கருதி, இம்மையம் அருகில் உள்ள வாடகைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது. பழைய கட்டடத்தை பழுதுநீக்கி சீர்செய்ய முடியாத நிலையில் உள்ளதால், அதனை முழுவதுமாக இடித்துவிட்டு இம்மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.